# 04-01-2025 செய்தி

## ஆக்ராவில் 17-ம் நூற்றாண்டில் அவுரங்கசீப் கட்டிய 'முபாரக் மன்சில்' அரண்மனை இடிப்பு

- உத்தர பிரதேச மாநிலம் ஆக்ராவில் உலகப் புகழ்ப்பெற்ற தாஜ்மகால் உள்ளது. யமுனை நதிக்கரையோரம் பல்வேறு நினைவுச் சின்னங்கள் உள்ளன.
- 17-ம் நூற்றாண்டில் 'முபாரக் மன்சில்' என்ற அரண்மனை முகலாயர்களால் கட்டப்பட்டுள்ளது. இந்த அரண்மனை அவுரங்கசீப்பால் கட்டப்பட்டதாக கூறுகின்றனர்.
- 'முபாரக் மன்சில்' குறித்து ஆஸ்திரியாவின் பிரபல வரலாற்று ஆசிரியர் எப்பா கோச் தனது 'தி கம்பிளீட் தாஜ் மகால் அண்ட் தி ரிவர்பிரன்ட் கார்டன்ஸ் ஆப் ஆக்ரா' என்ற புத்தகத்தில் விவரித்துள்ளனர்.
- முகலாயர்கள் ஆட்சி காலத்தில் இந்த அரண்மனையில் அவுரங்கசீப், ஷாஜகான், ஷுஜா உட்பட முக்கிய பிரமுகர்கள் தங்கியதாக கூறுகின்றனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1902-ம் ஆண்டு இந்த முபாரக் மன்சில் புதுப்பிக்கப்பட்டது. அப்போது பிரிட்டிஷாரின் அலுவலகமாக அந்த அரண்மனை மாற்றப்பட்டது. மேலும், 'தாரா நிவாஸ்' என்றும் அழைக்கப்பட்டது.
- இந்நிலையில், முபாரக் மன்சிலை பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக அறிவிப்பது தொடர்பாக ஆட்சேபனைகளை கேட்டு உ.பி. மாநில தொல்லியல் ஆய்வுத் துறை கடந்த செப்டம்பர் மாதம் அறிவிப்பு ஒன்று வெளியிட்டது.

## எச்.எம்.பி.வி., என்றால் என்ன?

- 'ஹியூமன் மெட்டா நியுமோ வைரஸ்' என்றழைக்கப்படும் இந்த தொற்று, நுரையீரலின் மேல் மற்றும் கீழ் பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. குறிப்பாக குழந்தைகள், முதியோர் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளோர் எளிதாக பாதிக்கப்படுகின்றனர்.
- இந்த தொற்று முதல்முறையாக 2001-ல் கண்டறியப்பட்டது: தடுப்பூசி இல்லை.

**எப்படி பரவும்?**

- எல்லா தொற்றுகளை போலவும், இருமல், தும்மலில் இருந்து வெளியேறும் நீர் துகள்களில் இருந்து மற்றவர்களுக்கு பரவுகிறது.
- தொற்று பாதித்தவர்களின் உடைமைகள் அல்லது கைகளை தொட்டுவிட்டு, மூக்கு, வாய் பகுதியை தொடும் போது பரவுகிறது.

**தடுப்பு முறைகள்**

- முக கவசம் அணிவது
- சமூக இடைவெளி
- சோப் போட்டு கைகளை கழுவுதல்.

**அறிகுறிகள்**

- ப்ளூ காய்ச்சல் மற்றும் இதர சுவாச தொற்றுகளின் போது ஏற்படும் அறிகுறிகளே தென்படும். இருமல், காய்ச்சல், மூக்கடைப்பு, மூச்சுவிடுவதில் சிரமம் போன்றவை பொதுவான அறிகுறிகள்.
- பாதிக்கப்படுவோர், மூன்று முதல் ஆறு நாட்கள் வரை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- தீவிர பாதிப்பு உள்ளோருக்கு மூச்சுக்குழாய் அழற்சி அல்லது நிமோனியா பாதிப்பு ஏற்படக்கூடும்.